மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) கூரையுடன் கூடிய கொட்டகைகளை அமைக்க சுமார் ரூ. 1.66 லட்சம் செலவாகும். பதிவான ஒப்பந்தக்காரர்களிடமிருந்து ஒப்பந்தப் புள்ளிகள் கேட்கப்பட்ட பிறகு, அவை துறையினால் அமைக்கப்படும். தமிழ்நாடு சிறுதொழில்கள் கழகம், கூரை உட்பட இக் கொட்டகைகள் அனைத்தையும், உருவாக்குவதற்கான அமைப்புகளைத் தயாரித்து, அவற்றை வழங்கி அக் கொட்டகைகளை நிறுவும் பணியை மேற்கொள்ளும். இப் பணி, ஏற்கெனவே இக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. சகாதேவக் கண்டர்: மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, இப்படிப்பட்ட கட்டடங்களைக் கூரைகளாகக் கட்டுவதைவிட, சிமெண்ட் மூலம் கட்டலாம். கூரைகளாக இருந்தால் ஒவ்வொரு ஆண்டிலும் திரும்பத் திரும்பச் செலவு செய்ய வேண்டி வரும். எனவே, இதை மாற்றி கல் கட்டடமாகச் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இப்படிப்பட்ட கொட்டகைகளை அமைப்பதற்கே சுமார் 1.66 லட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்படுகிறது. இன்னும் நிரந்தரமாக கல் கட்டடமாகக் கட்ட வேண்டுமென்றால் இன்னும் அதிகப்படியாகச் செலவாகும். நிதிநிலையை உத்தேசித்தும், மேலும் வெய்யிலுக்கும், மழைக்கும் பாதுகாப்பாகத்தான் இப்படிப்பட்ட கூரைகளே தவிர, நிரந்தரமாகச் செய்ய வேண்டுமென்றால் அதிகம் செலவாகும் என்பதால் குறைந்த செலவில் இப்படிப்பட்ட கொட்டகைகளை அரசாங்கம் ஏற்பாடு செய்து கொண்டு வருகிறது.

திரு. பி. எஸ். தனுஷ்கோடி: தலைவரவர்களே, இந்த விவசாய இயந்திரக் கருவிகள் பலயிடங்களிலும், மழையிலும், வெய்யிலிலும் இருந்து அந்தச் சாமான்கள் பூராவும் துருப் பிடித்து அதிக நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே, மாவட்டவாரியாக ஒரு தொழிற்சாலைக் கட்டடம் கட்ட அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இப்பொழுது, இதுபோல் நான்கு கொட்டகைகளுக்கு 6.64 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த நான்கில், கடலூரில் ஒன்றும், திருநெல்வேலி, கோயம்புத்தூர், சேலம் ஆகிய மாவட்டங்களில் ஒன்றாகவும் இப்பொழுது ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கு ஐ.ஏ.எஸ். அதிகாரிகள்

* 355 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன்:** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டிலுள்ள எந்தெந்த கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்?

(இ) அதற்கான காரணம் என்ன?

1970 மார்ச் 13]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) வட ஆற்காடு கூட்டுறவு சர்க்கரை ஆலே, ஆம்பூர், கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலே, மூங்கில்துறை பட்டு ; சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலே, மோகனூர் சர்க்கரை ஆலே.

(இ) பல துறைகளிலுள்ள இளம் அதிகாரிகள் தொழில் நிறுவனங்களின் நிர்வாகத் திறமையில் தேர்ச்சி பெற வேண்டும் என அரசு விரும்புகிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகளே ஏற்படுத்தியதற்குக் காரணமே, ஏற்கெனவே நல்ல முறையிலே நடந்து கொண்டிருந்த அந்தச் சர்க்கரை ஆலேகளிலே நிர்வாகம் மோசமான அளவுக்குப் போனதால்தான் அந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நியமிக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அது உண்மையா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஐ. ஏ. எஸ். அதிகாரிகள் போனல் நல்ல நிர்வாகம் நடக்கும் என்று அங்கத்தினர் ஒப்புக் கொண்டதற்கு நன்றி.

குப்பம் பகுதியில் உரேனியம், தோரியப் படிவங்கள்

*** 356 வினு—திரு. ஆர். கருப்பையா :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வட ஆற்காடு மாவட்டம் குப்பம் பகுதியில் அணுசக்திக்குத் தேவையான உரேனியம், தோரியம் கிடைப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதா ?

(இ) இதனே எடுக்க அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லே.

(இ) கேள்விக்கு இடமில்லே.

திரு. ஆர். கருப்பையா : தலேவரவர்களே, அணுசக்திக்குத் தேவையான உரேனியம் போன்ற பொருள்கள் திருச்சி மாவட்டத்தில் அரியலூருக்கும் கீழப்பழுவூருக்கும் இடையே கிடைப்பதாகச் செய்தி வந்தது. அப்படிக் கிடைக்கும் அந்தப் பொருள்கள் உண்மையானவைதான என்று கண்டு பிடிக்க, ஒரு கமிட்டியையோ அல்லது அதிகாரிகளேயோ நியமித்து ஆவன செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கேள்வி, வட ஆற்காடு மாவட்டத்தைப் பற்றியது. திருச்சி ரொம்ப தூரம். திருச்சியைப் பற்றித் தனியாகக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரலாம்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலேவரவர்களே, கேள்வி வட ஆற்காடு பற்றியது என்று சொன்னர்கள். அந்தக் குப்பத்திலே அணுசக்திக்கு வேண்டிய உரேனியம் கிடைக்கிறதா என்று கேள்வி